1975 மார்ச் 15]

அரிசன மாணவர் விடுதிகள்.

*339 வினா : திரு. வ. முத்து.—மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், திருச்சங்கோடு வட்டம், மல்லசமுத்திரம், கோட்டப்பாளையம் ஆகிய இடங்களில் அரிசன, மாணவர் விடுதி கட்டும் செயற்குறிப்பு உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்.—(அ) சேலம் மாவட்டம் கோட்டப்பாளையத்திலிருக்கும் அரசினர் அரிசன மாணவர் விடுதிக்காக கட்டடம் கட்டும் செயற்குறிப்பேதும் அரசிடமில்லை. ஆயினும் மல்ல சமுத்திரத்திலிருக்கும் அரசினர் அரிசன மாணவியர் விடுதிக்கும், மாணவர் விடுதிக்கும் கட்டடங்கள் கட்டுமாறு தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகத்துக்கு அரசு உத்திரவிட்டுள்ளது.

(இ) மல்ல சமுத்திரத்திலுள்ள விடுதிகளுக்குக் கட்டடம் கட்டும் பணியைத் தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம் உரிய காலத்தில் மேற்கொள்ளும்.

*340 வினா : திரு. ஏ. எம் டி. நாச்சியப்பன் : மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் வட்டம், ஆத்தூரில் உள்ள அரசு கழக உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கென அங்கு ஒரு அரிசன மாணவர் இல்லம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:—(அ) ஆம்.

(இ) மதுரை மாவட்டம் ஆத்தூரில் 50 மாணவர்கள் தங்கிப் பயிலும் வசதியுடையதாய், தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கென அரசு விடுதியொன்று, தொடங்கும் செயற்குறிப்பு, அரிசன நல இயக்குநரிடமிருந்து வரப்பெற்றுள்ளது. 1974-75-ஆம் ஆண்டுக்கு 21 புதிய விடுதிகள் நிதிநிலைக்கேற்ப திறக்க அரசு முடிவு செய்து அதற்கான இடங்களையும் தேர்ந்தெடுத்து ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. ஆகவே, மேற்படி கோரிக்கை இம்மாதிரி வரப்பெறும் இதர கோரிக்கைகளுடன் 1975-76-ம் ஆண்டில் இரண்டாம் நிலைத்-திட்டத்தின் கீழ் பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

(முற்பகல் 9-30).

திரு. என். மருதாசலம்: அரிசன மாணவர்களுக்காக 21 புதிய விடுதிகள் திறப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்தெந்த இடத்தில் திறக்கப் போகிறார்கள்?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: இப்போதுதான் இடங்களைத் தேர்ந்தெடுக்கச்சொல்லி அந்தந்த மாவட்ட அதிகாரிகளுக்கு அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. இடங்களைத் தெர்ந்தெடுத்து பட்டியல் வந்த பிறகு குறிப்பிட்டுச் சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:—வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) நடைமுறைக் கேள்விகள்.

(அ) பேரவையில் நிறைவேற்றப்பட்ட மாநிலசுயாட்சி பற்றிய தீர்மானத்தின் மீது மத்திய அமைச்சரவை நடத்திய விவாதம் குறித்து அரசுக்குத் தகவல் வந்துள்ளதா என்பது பற்றி.

திரு. நா. வீராசாமி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இராசமன்னர் குழு அறிக்கையை இந்த மன்றத்தில் விவாதித்து மாநிலசுயாட்சித் தீர்மானத்தை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தோம். அதைப்பற்றி இந்த மன்றத்தில் இருக்கும் சிலர் அது பிரிவினை வாதம் என்று சொன்னாலும் அவசரம் அவசரமாக இன்றையதினம் மத்திய அரசாங்கம் அமைச்சரவையைக் கூட்டி அதைப் பற்றி வியாழக்கிழமை இரவு விவாதித்து இருக்கிறது. அதைப் பற்றியும், அரசியல் சாசனத் திருத்தம் பற்றியும் பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. அப்படி விவாதிக்கிறபோது ஒரு நல்ல கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். "ஷேக் அப்துல்லாவிற்கும் மத்திய அரசாங்கத்திற்கும் இடையே காஷ்மீர் பற்றி உடன்பாடு ஏற்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் மாநில சுயாட்சி கேட்கும் பின்னணியில் இந்த முடிவைக் கவனிக்க வேண்டும்.....................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே என்ன பாயின்ட் ஆப் ஆர்டர் இருக்கிறது ?

திரு. நா. வீராசாமி: இப்படி மத்திய அரசாங்கம் அவசர அவசரமாக கூடி இதைப் பற்றி விவாதித்திருக்கிறார்கள். இதைப் பற்றி அரசாங்கத்திற்கு விவரம் அளித்திருக்கிறார்களா? அல்லது இந்த மன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற நேரத்தில்.....................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல.